# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

[FIFTH SESSION OF SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.]

**Thursday, the 5th February 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, the Deputy Speaker (Sri B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO DR. V. K. JOHN.

DEPUTY SPEAKER: I regret to announce the death of Dr. V. K. John, a sitting Member of the Madras Legislative Council, and I request the hon. Members to stand in silence for a minute.

Accordingly, hon. Members stood in silence, for a minute.

## II.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Supply of electricity to Block Development areas.*

* 1 Q—SRI C. MUTHIAH PILLAI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-58-ல் அபிவிருத்தித் தொகுதிகளில் மின்சாரத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) அதை எப்படி செலவு செய்யவேண்டும் என ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பப்பட்டதா ?

(இ) எத்தனைத் தொகுதிகளில் பணம் செலவிடப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) A lump sum of Rs. 30 lakhs in respect of 19 Community Development Blocks of the First Plan has been granted as loans to the State Electricity Board.

(*b*) No. The amount was placed directly at the disposal of the State Electricity Board.

(*c*) The loan of Rs. 30 lakhs was sanctioned as lump sum to the State Electricity Board for meeting the expenditure incurred in the 19 Community Development Blocks of the First Plan. The whole sum has been utilised by the State Electricity Board.

SRI K. B. S. MANI: அபிவிருத்தி தொகுதிகளில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட காலத்தில் அதற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகைகள் செலவிடப்பட வேண்டுமென்று, அப்படி செலவு செய்து அந்த வேலைகளை முடித்துவிட வேண்டும் என்ற உத்தரவு ஒன்று கலெக்டருக்கு விடப்பட்டிருக்கிறதா ? அந்த

வேலைகளுடன் என்ன செய்ய வேண்டுமென்றும் எப்படிப்பட்ட வேலைகள் செயய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி மின்சார அபிவிருத்திக்காக கடன் ஒதுக்கப்பட்டது சம்பந்தமானது. தவிர அதற்கு என்று முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதுவும் பத்தொன்பது ப்ளாக்குகளுக்கு அதை பங்கிட்டு கொடுக்கப்பட்டு அந்தந்த ப்ளாக்குகளில் அவை செலவிடப்பட வேண்டும் என்று இருக்கிறது.

SRI S. LAZAR : லைசென்சுதார்களுக்கும் இப்பொழுது பணம் ஒதுக்கப்படுகிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் கமிட்டிக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்து மின்சார போர்டுக்குக் கொடுப்பது போன்று லைசென்சு தாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்தையும் செலவு செய்வதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த முப்பது லட்சம் ரூபாயையும் தனிப்பட்ட லைசென்சிகளுக்குக் கொடுப்பதற்கு இல்லை. பூரா வையும் போர்டுக்குக் கொடுத்து செலவிடப்படும்.

SRI C. MUTHIAH PILLAI : அபிவிருத்தி தொகுதிகளில் லைசென்சுதாரர்களுக்கு கடன் கொடுத்தும் அந்தத் தொகுதிகளில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதைப்பற்றி ப்ளாக் அட்வைசரி கவுன்சிலில் ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறது. ஆகவே அந்தந்தத் தொகுதிகளில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்பதை முன் கூட்டியே நிர்ணயம் செய்து அவற்றை அந்த திட்டத்தில் சேர்ப் பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அட்வைசரி கவுன்சில் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்ட லைசென்சிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடியது வேறு விஷயம். அவர்கள் குறிப்பிட்ட வேலைகளுக்குக் கடன் வேண்டு மென்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்தால் அதைப்பற்றி கவனித்து அவர்களுக்கு பணம் ஒதுக்கப்படுகிறது. மின்சார அபிவிருத்திக்காக ஒவ்வொரு பகுதிகளிலும் அபிவிருத்திக்கு என்று ஒதுககப்பட்டு இருக்கும் தொகை அங்கே எவ்வளவு செலவு செய்ய வேண்டும் எனபதைப்பற்றி அங்குள்ள ஆலோசனை சபை கவனித்து அதன் படியே செய்யும் என்று நான் நம்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : தஞ்சை ஜில்லாப் பகுதிகளில் அதாவது சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்பொரேஷன் பகுதி களில் இப்படி வேலைகளுக்கு என்று கடன் கேட்டிருக்கிறார்கள். கடன் வேண்டுமென்று மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்கள் எவ் வளவு வருஷங்களாக சர்க்காரிடம் பரிசிலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : : கனம் மின்சார மந்திரி அவர்களுக்கு இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அவர் அதற்கு பதில் சொல்வார்.

*State Rolling cup for agricultural production.*

*2 Q—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ராஜ்ய கலசப் பரிசு விவசாயத்தில் முதன்மை ஸ்தானம் பெறும் ஜில்லாவிற்கு அளிக்கும் உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானல், அதன் முழு விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.